


# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.45

# அறிவிப்புகள்

# 2024 - 2025

# சமூக நலன்
# மற்றும்
# மகளிர் உரிமைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.45

## அறிவிப்புகள்
**2024-2025**


## திருமதி பி. கீதா ஜீவன்
**சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர்**

1. சென்னை மாநகரத்தில், பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் விதமாகவும், பெண்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் விதமாகவும், அரசு மானியமாக தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 200 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மானியம் வழங்கி, இரண்டு கோடி ரூபாய் செலவில் 200 இளஞ் சிவப்பு ஆட்டோக்களை (Pink Autos) இயக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகரத்தில் இரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் பெண்களால் இயக்கப்படும் ஆட்டோக்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தனியாக பாதுகாப்புடன் பயணம் செய்ய ஏதுவாக தனி வண்ணம் கொண்ட பெண்களுக்கான உதவி எண் மற்றும் இருப்பு நிலைகலன் அமைப்பு (GPS) பொருத்தப்பட்டு காவல் துறை மூலம் கண்காணிக்கப்படும் வகையில் இளஞ்சிவப்பு ஆட்டோ (Pink Auto) நடைமுறைப்படுத்தப்படும்.

வாகனம் ஓட்டுவதில் உரிமம் பெற்ற, ஆர்வமுள்ள 200 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஆட்டோ வாங்குவதற்கு, ஆட்டோவின் மொத்த விலையில் 1.00 இலட்சம் ரூபாய் அரசால் மானியமாக வழங்கப்படும். கடன் உதவிக்காக தேசியமயமாக்கப்பட்ட அல்லது இதர வங்கிகளுடன் இணைக்கப்படுவார்கள்.



2. சமூக நலத் துறையின் மூலம் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்காக செயல் -படுத்தப்படும் நலத்திட்டங்களில் பயன் பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளில் ஒன்றான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 72,000 ரூபாயிலிருந்து 1,20,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

தமிழ் நாட்டில் தற்போதுள்ள பொருளாதார முன்னேற்றம் காரணமாக தனிநபர் வருமானம் மற்றும் வாழ்வாதாரம் ஏற்றம் பெற்றுள்ளது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களான முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், ஈ.வி.ஆர்.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டம், சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத்திட்டங்களில் பயன் பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளில் ஒன்றான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பினை 72,000 ரூபாயிலிருந்து 1,20,000 ரூபாயாக உயர்த்தப்படும். இதன் மூலம் ஏழை குடும்பங்களை சார்ந்த தகுதி வாய்ந்த பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் அதிகளவில் பயன்பெறுவர்.

**3 . கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம்பெண்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 200 பயனாளிகளுக்கு சுயதொழில் செய்ய தலா 50,000 ரூபாய் வீதம் 1.00 கோடி ரூபாய் மானியம் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும்.**

கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம்பெண்கள் ஆகியோரிலிருந்து வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 2 0 0 பயனாளிகளை தேர்வு செய்து, அவர்கள் சுயதொழில் செய்து சுயமரியாதையுடன் சமுதாயத்தில் வாழ, நடமாடும் உணவகங்கள், பழங்கள் மற்றும் காய்கறி வியாபாரம், நடமாடும் சிற்றுண்டி கடைகள், நடமாடும் பழச்சாறு கடைகள், சலவைக் கடைகள் (Ironing shop) போன்ற சுயதொழில்கள் மூலமாக நிலையான வருமானம் பெற, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வண்ணம் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல



வாரியத்தின் மூலம் ஒரு பயனாளிக்கு 50,000 ரூபாய் வீதம் 200 பயனாளிகளுக்கு 1.00 கோடி ரூபாய் செலவினத்தில் மானியம் வழங்கப்படும்.

**4. தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்தின் மூலம் திருவள்ளூர், கோயம்புத்தூர், திருப்பூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 6 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் 1.00 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்படும்.**

வீட்டை விட்டு வெளி இடங்களில் பணிபுரிய வரும் மகளிருக்கு உதவும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பு மற்றும் இனிமையான சூழலுடன் நியாயமான கட்டணத்தில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

பணிபுரியும் மகளிர் விடுதிகளை உருவாக்குதல், புதுப்பித்தல், வடிவமைத்தல், கட்டுதல், மேம்படுத்துதல், செப்பனிடுதல் ஆகிய பணிகளை தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் செய்து வருகிறது.

திருவள்ளூர், கோயம்புத்தூர், திருப்பூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் மதுரை ஆகிய 6 மாவட்டங்களில், 190 படுக்கைகள் கொண்ட அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் 1.00 கோடி ரூபாய் செலவினத்தில் தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் மூலம் மறுசீரமைக்கப்படும்.



**5. கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம்பெண்கள் ஆகியோரின் நலனுக்காக விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக கருத்தரங்குகள் 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடத்தப்படும்.**

கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்கள் ஆகியோருக்கு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் மூலம் மாவட்ட அளவில் நிதியினை முறையாக கையாளுதல், சொத்துரிமை, குடும்ப வன்முறைகளிலிருந்து உரிய பாதுகாப்பு, இலவச சட்ட உதவி, அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த 40 கருத்தரங்குகள் 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடத்தப்படும்.

**6. ஆறு அரசு சேவை இல்லங்கள் மற்றும் 2 7 அன்னை சத்யா குழந்தைகள் காப்பகங்களில் உள்ள மாணவிகளுக்கு 1.00 கோடி ரூபாய் மதிப்பில் தற்காப்பு கலை மற்றும் விளையாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.**

33 அரசு இல்லங்களில் ( அரசு சேவை இல்லம் மற்றும் அன்னை சத்யா குழந்தைகள் இல்லம்) தங்கியுள்ள மாணவிகளுக்கு, குடும்ப ஆதரவு அமைப்பு இல்லாத காரணத்தினால் கடினமான சூழ்நிலைகளிலும் தங்களை தாங்களே தற்காத்து கொள்வது மிகவும் அவசியமாகும். தற்காப்பு கலையை கற்று கொள்ளும் மாணவிகளுக்கு அந்த கலை ஒரு தன்னம்பிக்கையை கொடுத்து, பொது வெளியில் செயல்படுவதற்கு கூடுதல் தைரியத்தை கொடுக்கின்றது.

ஏனவே 6 அரசு சேவை இல்லங்கள் மற்றும் 2 7 பெண் குழந்தை இல்லங்களில் தங்கியுள்ள மாணவிகளுக்கு தற்காப்பு கலை மற்றும் விளையாட்டுப்பயிற்சி வழங்குவற்கு தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மாதம் ரூபாய் 25,000/- வீதம் 33 இல்லங்களில் நியமிக்கப்பட்டு 1 . 0 0 கோடி ரூபாய் மதிப்பில் பயிற்சி அளிக்கப்படும்.



**7 . அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 12,567 அரசு மற்றும் தனியார் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 தொடர்பாக விழிப்புணர்வு பலகைகள் 62.83 இலட்சம் ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.**

குழந்தைத் திருமணம் என்பது குழந்தைகளின் உரிமைகளை மீறுவதுடன் அவர்களின் உடல் நலம், கல்வி மற்றும் வாழ்க்கையில் கடுமையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகிறது. குழந்தைத் திருமணத்தால் ஏற்படக் கூடிய தீமைகள் குறித்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குழந்தைகள் உதவி எண்களுடன் குழந்தைத் திருமணத்தின் விளைவுகள் மற்றும் குழந்தைத் திருமணத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ள தண்டனைகள் ஆகியவற்றை சித்தரித்து, குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு பலகை ஒன்று (3x2 அடி அளவு) ரூபாய் 500/- வீதம் 12,567 அரசு மற்றும் தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மொத்தம் 62.83 இலட்சம் ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.

**8. அனைத்து மாவட்டங்களிலும், 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள 451 பள்ளி சத்துணவு மையங்களுக்கு 9.00 கோடி செலவினத்தில் முட்டை உரிப்பான் (egg peeler) இயந்திரங்கள் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளி சத்துணவு மையங்களிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு சத்துணவு திட்டத்தின் கீழ் நாள்தோறும் முட்டையுடன் சத்தான மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதிக அளவில் பயனாளிகளைக் கொண்ட மையங்களில் தினமும் 500 முட்டைகளுக்கு மேல் வேகவைத்து உரித்தலில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கவும் முட்டைகளை வேகவைத்தல் மற்றும் உரித்தலில் சுகாதாரமான நடை முறையினை பின்பற்றுதல் அவசியமென்பதால், அனைத்து மாவட்டங்களிலும் 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள 451 பள்ளி சத்துணவு மையங்களுக்கு ரூ. 9.00 கோடி செலவினத்தில் முட்டை உரிப்பான் (egg peeler) இயந்திரங்கள் வழங்கப்படும்.



**9. முதியோர் ஆரோக்கியத்துடன், சுறுசுறுப்பாக வாழ, மாநில அரசு மானியம் பெறும் 23 முதியோர் இல்லங்கள் மற்றும் 44 ஒருங்கிணைந்த வளாகங்களில் உள்ள 2,020 முதியோர் பயனடையும் வகையில் 40.20 இலட்சம் ரூபாய் மதிப்பில், யோகா, மூச்சுப் பயிற்சி, தியானப் பயிற்சி போன்றவை தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம் பயிற்றுவிக்கப்படும்.**

தமிழ் நாடு அரசு நிதியுதவி பெறும் முதியோர் இல்லம் மற்றும் ஒருங்கிணைந்த வளாகங்களில் உள்ள முதியோர், தங்கள் முதுமை காலத்தில் ஆரோக்கியத்துடன், சுறுசுறுப்பாக வாழ்வதற்கு எளிய மூச்சுபயிற்சி, தியானம் மற்றும் யோகா பயிற்சிகள் தேவைப்படுவதால், மாநில அரசு மானியம் பெறும் 23 முதியோர் இல்லங்கள் மற்றும் 44 ஒருங்கிணைந்த வளாகங்களில் உள்ள 2,020 முதியோர்களுக்கு யோகா, தியானப்பயிற்சி, மூச்சுபயிற்சி போன்றவற்றை அளிக்க, பகுதி நேர யோகா பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு, மாதம் ஒன்றிற்கு ரூபாய் 5,000/- வீதம் மொத்தம் 40.20 இலட்சம் ரூபாய் மதிப்பில் பயிற்சி அளிக்கப்படும்.

**10. ஆதரவற்ற முதியோர் நலனுக்காக 7 சுற்றுலா தலங்களில் உள்ள முதியோர் இல்லங்களில், சிறப்பு தங்கும் வசதிகள் 40.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

திருவண்ணாமலை, திருச்செந்தூர், பழனி, நாகூர், வேளாங்கண்ணி, இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய 7 சுற்றுலா தலங்களில் கைவிடப்படும் மற்றும் காணாமல் போகும் ஆதரவற்ற முதியோர்களை கண்டறிந்து, அவர்களை கண்ணியமாக பராமரிக்கும் விதமாக, மேற்கண்ட சுற்றுலா தலங்களில் அமைந்துள்ள அரசு நிதியுதவி பெறும் ஒவ்வொரு முதியோர் இல்லத்திலும் கூடுதலாக 20 படுக்கை வசதிகள் 40.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.



**11. தனியாரால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மற்றும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் பதிவு மற்றும் உரிமம் பெறும் நடைமுறை, எளிய ஆளுமை (Simple Governance) திட்டம் மூலம் எளிதாக்கப்படும்.**

அரசின் அனைத்து சேவைகளும் பொதுமக்களை எளிதாகவும், சிறந்த முறையிலும் சென்றடைய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கத்தை அடைய, புதிய திட்டமான எளிய ஆளுமை (Simple Governance) உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை முதியோர் இல்லம் மற்றும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் பதிவு செய்வதற்கு பல்வேறு விதிகள் மற்றும் நடைமுறைகள் கடைபிடிக்க வேண்டியுள்ளது. மேற்படி விடுதிகள் மற்றும் இல்லங்கள் நடத்தும் நிறுவனங்கள் பதிவு மற்றும் உரிமம் பெறுவதற்காக பல்வேறு அலுவலகங்களை நாடி தேவையான சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களை பெற வேண்டியுள்ளது. இதனால் கால விரயம் ஏற்படுகின்றது. இதனை தவிர்க்க, பணிபுரியும் மகளிர் விடுதிகள் மற்றும் முதியோர் இல்லங்களை பதிவுசெய்து, உரிமம் பெறுவதற்கு நிறுவனங்களின் சுய உறுதி சான்றுடன் தேவையான சில ஆவணங்களை

இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, பதிவு மற்றும் உரிமச் சான்று கணினி வழியாகவே பிறப்பிக்கப்படும். இத்திட்டம் மூலம் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கும். மேலும் பதிவு செய்தல் மற்றும் உரிமம் பெறுதல் வெகு எளிமையாக்கப்படும்.



**12. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 54,449 குழந்தைகள் மையங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5,590 குழந்தைகள் மையங்களை 55.90 கோடி ரூபாய் செலவினத்தில் சீர்மிகு குழந்தைகள் மையங்களாக தரம் உயர்த்தப்படும்.**

குழந்தைகள் மையத்திற்கு முன்பருவக் கல்வி பயில வருகை புரியும் குழந்தைகளுக்கு நல்ல பசுமையான காய்கறிகளை வழங்கும் பொருட்டு குழந்தைகள் மையங்களிலேயே ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் அமைப்பதுடன், விளையாட்டுகளுடன் கருத்து பரிமாற்ற முறையில் கல்வி கற்றலை மேம்படுத்திட, இணையதள வசதியுடன் கூடிய எல். இ. டி (LED) தொலைக்காட்சியும், குழந்தைகளுக்கு இதமான சூழலை உருவாக்கிட, மையத்தின் உட்கட்டமைப்பினை மேம்படுத்தி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு குடிநீர் சுத்திகரிப்பான் மற்றும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி ஆகியனவற்றை ஏற்படுத்தி 5,590 குழந்தைகள் மையங்கள் 55.90 கோடி ரூபாய் செலவினத்தில் "சீர்மிகு குழந்தைகள் மையங்களாக" தரம் உயர்த்தப்படும்.

13. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வரும் 6,527 குழந்தைகள் மையங்களில் 11.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முறையான குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 54,449 குழந்தைகள் மையங்களில் 40,516 மையங்கள் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் 6,527 மையங்களில் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும், குழந்தைகளிடையே கைகழுவும் பழக்கத்தினை ஏற்படுத்துவதற்கும், முறையான குடிநீர் வசதி 11.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.



14. குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து உணவு முறைகளை கண்காணிக்க 34.50 கோடி ரூபாய் செலவினத்தில் 29,236 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பழைய திறன் கைப்பேசிகளுக்கு பதிலாக புதிய திறன் கைப்பேசிகள் வழங்கப்படும்.

கர்ப்பிணிப் பெண்களின் எடையினையும், 0 - 6 வயதுடைய குழந்தைகளின் வளர்ச்சியினையும், நிகழ்நேர கண்காணிப்பாக திறன் கைப்பேசியிலுள்ள செயலியின் மூலம் கண்காணித்து, ஊட்டச்சத்து குறைபாட்டினை குறைக்கும் நோக்கில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட திறன் கைப்பேசிகளுக்கு பதிலாக 29,236 புதிய திறன் கைப்பேசிகள் 34.50 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

**15. குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உயரம் மற்றும் எடையை அளவிடுவதற்கு குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நான்கு வகையான வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் 14.18 கோடி ரூபாய் செலவினத்தில் புதியதாக மாற்றி வழங்கப்படும்.**

கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 0 - 6 வயதுடைய குழந்தைகள் ஆகியோரின் உயரம் மற்றும் எடையினை ஒவ்வொரு மாதமும் அளவிட்டு தொடர்ந்து கண்காணித்து அவர்களது வளர்ச்சியினை உறுதிசெய்வதற்காக, குழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவிகள் (Infantometer), குழந்தைகள் மற்றும் பெண்களின் உயரத்தை அளவிடும் கருவிகள் (Stadiometer), தாய் மற்றும் குழந்தை எடை எடுக்கும் கருவிகள் (Mother & Child Digital Weighing Scale), மற்றும் குழந்தைகளின் எடை கருவிகள் (Infant Weighing Scale) ஆகிய நான்கு வகையான கருவிகள் வழங்கப்பட்டு நான்கு ஆண்டுகளாவதால் அவற்றிற்கு பதிலாக புதிய கருவிகள் 14.18 கோடி ரூபாய் செலவினத்தில் குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்படும்.



**16. பச்சிளம் குழந்தைகளுக்கு சத்தான உணவு ஊட்டுதல் முக்கியத்துவம் குறித்து பாலூட்டும் தாய்மார்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக, 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பயிலரங்கங்கள் (Workshops) நடத்தப்படும்.**

பச்சிளம் குழந்தைகளுக்கான உணவு ஊட்டுதல் முறைகள் குறித்து அங்கன்வாடிப் பணியாளர்களின் அறிவை மேம்படுத்தவும், பாலூட்டும் தாய்மார்களுக்கு குழந்தை வளர்ப்பு மற்றும் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினை உருவாக்க ஆலோசனை வழங்கவும், 2,500 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஆலோசனை திறனை மேம்படுத்த 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பில் பயிலரங்கங்கள் (Workshops) நடத்தப்படும். இப்பயிலரங்கங்கள் மூலம் பாலூட்டும் தாய்மார்களுக்கு சுத்தம், சுகாதாரம், பச்சிளம் குழந்தைகளுக்கான உணவூட்டுதல், பேறு காலத்திற்கு பிந்திய கவனிப்பு குறித்து முறையான ஆலோசனைகள், அங்கன்வாடிப் பணியாளர்களால் வழங்க முடியும். இதன் மூலம், குழந்தைகளின் வளர்ச்சிக் குறைபாடு, எடை குறைவு மற்றும் நோய்வாய்ப்படுதல் தடுக்கப்படுவதால், குழந்தைகளின் சீரான வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும்.

**17. ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் குறித்து 3,800 வளரிளம் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட 47.50 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.**

ஊட்டச்சத்து குறைபாடுகள், இரத்த சோகையினை தடுப்பதற்கான பழக்க வழக்கங்கள், ஆரோக்கியமான மாதவிடாய், சுகாதார நடைமுறைகள், சரியான ஊட்டச்சத்து, குழந்தை திருமணம், இளவயது கர்ப்பம் மற்றும் இளவயது கர்ப்பத்தால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்தும், 3,800 வளரிளம் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு முகாம்கள் 47.50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.



**18. அரசு நிறுவனங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் பாதுகாப்பினை கண்காணிக்க குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் இயக்குநரகத்தில் ஒருங்கிணைந்த சிறப்பு கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்படும்.**

தமிழ் நாடு முழுவதும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் தங்க வைக்கப்பட்டுள்ள 8 அரசு கூர்நோக்கு இல்லங்கள், நீண்ட கால மறுவாழ்விற்காக தங்க வைக்கப்படும் அரசு சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களில், தங்க வைக்கப்பட்டுள்ள சிறார்களின் பாதுகாப்பை நிகழ் நேர கண்காணிப்பு செய்ய "ஒருங்கிணைந்த சிறப்பு கண்காணிப்பு மையம்" குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்குநரகத்தில் அமைக்கப்படும்.

**19. திருச்சிராப்பள்ளி, அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு இல்லச் சிறார்கள் தங்குமிடம், தொழில் பயிற்சி கூடம், ஆற்றுப்படுத்துநர் அறை, நூலகம், விளையாட்டு மைதானம் மற்றும் கண்காணிப்பாளர் / உதவி கண்காணிப்பாளர் குடியிருப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கட்டடங்கள் 12.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

திருச்சிராப்பள்ளியில் செயல்பட்டு வரும் அரசினர் கூர்நோக்கு இல்லத்தின் உள்ளேயே இளைஞர் நீதிக் குழுமமும் செயல்பட்டுவருகிறது. இவ்வில்லம் தற்போது போதிய இடவசதிகள் இல்லாமல் செயல்பட்டு வருவதாலும், விளையாட்டு மைதானம், சிறார்களை வயது வாரியாக மற்றும் குற்றத்தின் தன்மையின் அடிப்படையில் தங்க வைப்பதற்கு கூடுதல் தங்கும் அறைகள், பயிற்சி அறைகள் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்துவதற்கு இங்கு போதிய இடவசதி இல்லாததாலும், சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்பட்டு இளைஞர் நீதிக் குழும ஆணையின்பேரில், கூர்நோக்கு இல்லத்தில் அனுமதிக்கப்படும்



சிறார்களிடையே குறிப்பிடத்தக்க உளவியல் மாற்றத்தை ஏற்படுத்தவும், நல்வழிப்படுத்தவும் தேவைப்படும் சேவைகளை வழங்கவும் ஒரு நபர் குழுவின் பரிந்துரையின்படி, திருச்சிராப்பள்ளியில் செயல்பட்டு வரும் அரசினர் பாதுகாப்பு இல்ல வளாகத்தில் சிறார்கள் தங்குமிடம், பயிற்சிக் கூடம், ஆற்றுப்படுத்துநர் அறை, நூலகம், கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளர் குடியிருப்புகள் உள்ளடக்கிய புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், விளையாட்டு மைதானம் மற்றும் பொழுது போக்கு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் 12.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**20. சென்னை, சேலம், கடலூர், திருநெல்வேலி, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய 6 அரசு கூர்நோக்கு இல்லக் கட்டடங்களில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் 6 அரசு கூர்நோக்கு இல்லங்களில், இல்லச் சிறார்களின் பயன்பாட்டிற்காக குளியல், கழிவறைகள், சமையலறை புனரமைத்தல், கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல், பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.



**21. செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் குழந்தைகளுக்கு கூடுதல் துயில் கூடங்கள், போதை தடுப்பு மையம், கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளருக்கான புதிய குடியிருப்பு கட்டடங்கள் ஆகியவை 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளர் இல்ல வளாகத்தில் தங்கி இருந்து, 24 மணி நேரமும் சிறார்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், சிறார்களை வயது வாரியாக பிரிந்து தங்க வைப்பதற்கு கூடுதல் அறைகளும், இல்ல வளாகத்திலேயே பிரத்தியேகமான போதை தடுப்பு மையம் அமைக்கவும், ஒரு நபர் குழுவின் பரிந்துரையின்படி, கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளர் குடியிருப்பு, கூடுதல் தங்கும் அறைகள் மற்றும் போதை தடுப்பு மையம் ஆகியவை 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். மேலும், போதை தடுப்பு மையம் 20.00 இலட்சம் ரூபாய் தொடர் செலவினத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும்.

**22. அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் உள்ள சிறார்களை ஆக்கப்பூர்வமான வகையில் ஈடுபடுத்தவும், அவர்களை மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாத வகையில் நல்வழிப்படுத்தவும் அடிப்படை பயிற்சி (Basic Training Module) 2.50 கோடி ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.**

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழியங்கும் அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் / கண்டறியப்பட்ட சிறார்கள் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களின் எதிர்மறை எண்ணங்களை மாற்றி மனதிற்கு உகந்த சூழலை உருவாக்கி அவர்களை ஆக்கப்பூர்வமான வகையில் ஈடுபடுத்தவும், அவர்களை மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாத வகையில் நல்வழிப்படுத்தவும் 2.50 கோடி ரூபாய் மதிப்பில் அடிப்படை பயிற்சி (Basic Training Module) வழங்கப்படும்.



**23. அரசு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு உணவின் அளவு, நடப்பு நிதியாண்டு முதல் 2.30 கோடி ரூபாய் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.**

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், அரசினர் பாதுகாப்பு இடங்கள் (Places of Safety) ஆகிய குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் அரசினர் பிற்காப்பு நிறுவனங்களில் தங்கி பயனடைந்து வரும் குழந்தைகளின் நலன் கருதி அவர்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அவர்களுக்கு தற்போது வழங்கப்படும் உணவின் அளவினை விட கூடுதலான அளவு 2.30 கோடி ரூபாய் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.

**2 4 . சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்பட்டு, சென்னை, அரசு கூர்நோக்கு இல்லத்தில் தங்க வைக்கப்படும் சிறார்கள் மீண்டும் குற்ற செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்காக "பாதை திட்டம்" (Pathai project) 40.00 இலட்சம் ரூபாய் செலவினத்தில் செயல்படுத்தப்படும்.**

சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டு சென்னை, அரசு கூர்நோக்கு இல்லத்தில் அனுமதிக்கப்படும் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துதல், மது மற்றும் போதை பழக்கத்திலிருந்து விடுவித்தல், திறன் மேம்பாடு ஆகிய செயல்பாடுகளின் மூலம் அவர்கள் மீண்டும் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடாமல் நல்வழிப்படுத்துவதற்காக பாதை திட்டம் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாக குழந்தை நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கண்காணிப்பில் 40.00 இலட்சம் ரூபாய் செலவினத்தில் செயல்படுத்தப்படும்.



**2 5 .செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் அமையவுள்ள அரசினர் பாதுகாப்பு இல்ல வளாகத்தில் (Government Place of Safety) கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

ஒரு நபர் குழு அறிக்கையின் பரிந்துரையின்படி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் செங்கல்பட்டு, ஆத்தூர் அரசினர் பாதுகாப்பு இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறார்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையிலும், இல்லத்தில் சிறார்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் தரத்தினை உயர்த்திடவும் இல்ல வளாகத்தில் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர் மற்றும் பாதுகாப்பு பணியாளர்களுக்கான குடியிருப்புகள் அமைப்பது அவசியமாகிறது. எனவே செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் அமையவுள்ள அரசினர் பாதுகாப்பு இல்ல வளாகத்தில் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர் மற்றும் பாதுகாப்பு பணியாளர்களுக்கான புதிய குடியிருப்பு கட்டடங்கள் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**26.மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் கூடுதல் துயில்கூடங்கள் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

அரசு கூர்நோக்கு இல்லங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த தமிழ் நாடு அரசால் நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரையில் சிறார்களின் நலன் கருதி கட்டட வசதிகளை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் செயல்படும் மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் தற்போது உள்ள துயில்கூடங்கள் போதிய இடவசதி இல்லாமல் இயங்கி வருவதாலும், சிறார்களை அவர்களின் வயதிற்கேற்ப பிரித்து வைப்பதற்கு ஏதுவாகவும், இரண்டாம் தளத்தில் கூடுதல் துயில்கூடங்கள் கட்டுவது அவசியமாகிறது. எனவே மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் இரண்டாம் தளத்தில் கூடுதல் துயில்கூடங்கள் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**27. சேலம், மதுரை, திருநெல்வேலி அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூர் அரசினர் பாதுகாப்பு இல்லத்தில் பார்வையாளர் / பெற்றோர் நேர்காணல் அறைகள் மற்றும் வாயிற்காவலர்களின் பயன்பாட்டிற்கு தனியாக கழிவறை வசதிகளுடன் கூடிய அறை 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின்கீழ் இயங்கி வரும் கூர்நோக்கு இல்லம் மற்றும் அரசினர் பாதுகாப்பு இல்லத்தில் தனியாக பார்வையாளர் / பெற்றோர் நேர்காணல் அறைகள் இருந்தால் குழந்தைகள் பெற்றோர்களுடன் உரையாடுவதற்கு பாதுகாப்பாக இருக்கும்.

மேலும், இவ்வில்லக் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு ஏதுவாக வாயிற்காவலர்கள் நியமிக்கப்பட்டு, இல்ல நுழைவாயிலிலிருந்து இல்லத்திற்குள் உள்நுழைபவர்கள், வெளியேறுபவர்கள், பார்வையாளர்கள், பணியாளர்கள் மற்றும் இல்லத்திற்கு எடுத்து செல்லப்படும் பொருட்கள் உள்ளிட்ட விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்து பராமரிக்கின்றனர்.

எனவே, சேலம், மதுரை, திருநெல்வேலி கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூர் அரசினர் பாதுகாப்பு இல்லத்தில் பார்வையாளர் / பெற்றோர் நேர்காணல் அறைகள் மற்றும் நுழைவாயில் அருகில் வாயிற்காவலர்களின் பயன்பாட்டிற்கு தனியாக கழிவறை வசதிகளுடன் கூடிய அறைகள் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.



**28. அரசினர் குழந்தைகள் இல்லங்களில் வாயிற்காவலர்களின் பயன்பாட்டிற்காக கழிவறை வசதிகளுடன் கூடிய அறை 1.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

அரசினர் குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு ஏதுவாக வாயிற்காவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் இல்ல நுழைவாயிலிலிருந்து இல்லத்திற்குள் செல்பவர்கள், வெளியேறுபவர்கள், பார்வையாளர்கள், பணியாளர்கள் மற்றும் இல்லத்திற்கு எடுத்து செல்லப்படும் பொருட்கள் உள்ளிட்ட விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்து பராமரிக்கின்றனர்.

எனவே, இல்ல நுழைவாயில் அருகில் வாயிற்காவலர்களின் பயன்பாட்டிற்கு தனியாக கழிவறை வசதிகளுடன் கூடிய அறை கட்ட வேண்டியுள்ளது. எனவே தஞ்சாவூர், மல்லிப்புதூர், ஈரோடு, பஞ்சப்பள்ளி, இராணிப்பேட்டை, விழுப்புரம் குழந்தைகள் இல்லங்களிலும், கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோயில், மதுரை, இராமநாதபுரம், சேலம் (பெத்தநாயக்கன்பாளையம்), சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருச்சி,

வேலூர் ஆகிய அன்னை சத்யா குழந்தைகள் இல்லங்களிலும் வாயிற்காவலர்களின் பயன்பாட்டிற்கு கழிவறை வசதிகளுடன் கூடிய அறை 1.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.



**29. அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் கட்டடங்களை பராமரிப்பதற்கான சிறப்பு மானியம் 3.00 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.**

இத்துறையின் கட்டடங்களை பராமரிக்க ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. 2023-24ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட 1.61 கோடி ரூபாய் நிதியானது இயக்குநரகம், இத்துறையின் கீழ் இயங்கும் 52 குழந்தைகள் இல்லங்கள், குழந்தை நலக் குழுமம் மற்றும் இளைஞர் நீதிக் குழும கட்டடங்களின் பராமரிப்பிற்கு போதுமானதாக இல்லை.

எனவே, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் செயல்படும் அனைத்து நிறுவனங்களின் கட்டட வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் 3.00 கோடி ரூபாய் செலவினத்தில் மேற்கொள்ளப்படும்.

**30. சென்னை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், மதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இரவல் பெறுவோர்களின் மறுவாழ்வுக்கான இல்லங்கள் 2.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

கோயில் நகரங்கள், புகழ்பெற்ற சுற்றுலாத்தலங்கள், முக்கிய ரயில்நிலையங்கள் உள்ள சென்னை, திருச்சி, இராமநாதபுரம், மதுரை, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இரவல் பெறுவோர்களின் எண்ணிக்கை அதிகம் காணப்படுவதால் சோதனை அடிப்படையில் மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள இரவல் பெறுவோர்களை மீட்டு சமுதாயத்துடன் ஒன்றிணைக்கும் வகையில் அவர்களின் மறுவாழ்வுக்காக அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் மாநில அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 2.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரவல் பெறுவோர்களுக்கான மறுவாழ்வு இல்லம் அமைக்கப்படும்.



**31. கோயம்புத்தூர் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளருக்கான புதிய குடியிருப்பு கட்டடங்கள் 2.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

ஒரு நபர் குழுவின் பரிந்துரையின்படி, கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளர்கள் இல்ல வளாகத்தில் தங்கி இருக்க ஏதுவாகவும், 24 மணி நேரமும் சிறார்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், கோயம்புத்தூர் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளர்கள் குடியிருப்பு ஆகியவை 2.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**32. தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் சேலம் (பெத்தநாயக்கன் பாளையம்) அரசினர் குழந்தைகள் இல்லங்களில் புதிய சமையலறைகள் மற்றும் உணவருந்தும் கூடங்கள், 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தஞ்சாவூர் அரசினர் குழந்தைகள் இல்லம் மற்றும் கோயம்புத்தூர், சேலம் (பெத்தநாயக்கன் பாளையம்) மாவட்டங்களிலுள்ள அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லங்களில் சமையலறைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவ்வில்லங்களில் புதிய சமையலறைகள் மற்றும் உணவருந்தும் கூடங்கள், 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## திருமதி பி. கீதா ஜீவன்

**சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்**